முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல, உயிரிழந்த இராணுவ வீரர் ஒருவரின் நிகழ்ச்சிக்கு நானும், அந்த மாவட்ட அமைச்சர் அவர்களும் போய்விட்டு வந்தோம். அங்கே அவருடைய மனைவிக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாகச் சொல்லப்பட்டது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாகின்றன. அவரும் P.G., Teacher Training எல்லாம் படித்திருக்கிறார். இன்னும் அவருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவில்லை. அதைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை தயவு கூர்ந்து இந்த அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மூத்த உறுப்பினர். அவர் கேள்வி கேட்டிருக்கிறார். அவருடைய படிப்புத் தகுதி குறித்து விவரம் கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அரசு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

144—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***27822—திரு. எஸ். அம்பேத்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வழூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2018 ஜூன் 7]

வந்தவாசி சட்டமன்றத் தொகுதி, வழூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று ஒன்றியப் பொது நிதியிலிருந்து அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. எஸ். அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒன்றியத்திற்குட்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படுமென்று தெரிவித்தார்கள். அது எப்போது ஒதுக்கப்படும்? எப்போது அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், வழூர் ஊராட்சியில் 2,341 மக்கள் வசித்து வருகின்றனர். ஊராட்சியிலுள்ள 4 குக்கிராமங்களில் 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இதில் 60,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் உள்ளன. இவற்றின்மூலம் விநியோகிக்கப்படக்கூடிய நீர் கிராமத்திலுள்ள பொது மக்களின் உபயோகத்திற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. வழூர் ஆரம்ப சுகாதார நிலையம், வந்தவாசி வட்டார தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, நாள்தோறும் அதிக அளவு எண்ணிக்கையிலான பொது மக்கள் மற்றும் நோயாளிகள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருகை தருகின்றனர். இவர்களின் குடிநீர்த் தேவை மற்றும் மருத்துவமனை குடிநீர்த் தேவை பயன்பாட்டினைக் கருத்தில்கொண்டு, 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றியப் பொது நிதியிலிருந்து கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே போதுமான நிதி*

[2018 ஜூன் 7

இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், கூடிய விரைவில், அதற்கு டெண்டர் விடப்பட்டு, விதிமுறைகளின்படி, உடனடியாக வேகமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

முற்பகல் 10-30

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆடியாத்தூர், பழூர், சலுக்கை, இரும்பேடு போன்ற கிராமங்களிலிருந்து அதிகமான நோயாளிகள் வந்து செல்வதால், அங்கே தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக உள்ளது. அதுமட்டுமல்லாமல், மின்சாரப் பற்றாக்குறை உள்ளதாலும் அங்கே பிரசவத்திற்காக வரும் கர்ப்பிணிப் பெண்கள் கஷ்டப்படுகின்றனர். ஆகவே, அந்தப் பணியினை, அங்குள்ள பொது மக்களின் நலனுக்காக உடனடியாகச் செய்து தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பதில் சொல்லிவிட்டீர்களா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: பதில் சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாகப் பல ஆண்டுகளாக, அதாவது கிராமங்களிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் மக்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைக்கேற்ப புதிதாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு வந்தன. தற்சமயம், அந்தப் பணிகளெல்லாம் அந்தந்த ஊராட்சிகளின் மூலமாக, ஒன்றியங்களின் மூலமாக, நகராட்சி, பேரூராட்சிகள் மூலமாகத்தான் கட்டப்பட வேண்டுமென்று வாரியத்தினுடைய

2018 ஜூன் 7]

அதிகாரிகள் சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் ஏற்கெனவே 40, 50 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட தொட்டிகளெல்லாம் பழுதடைந்து விட்டன, அந்தத் தொட்டிகளைக் கண்டறிந்து தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாக புதியதாகக் கட்டுவதற்கு சிறப்பு நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னர் கிராம கூட்டுக் குடிநீர்த் திட்டம் இருந்தது என்பது மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரியும். அத்திட்டம் மத்திய அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டது. அதற்கு முன்பெல்லாம், நாம் எந்தத் திட்டமாக இருந்தாலும் எடுத்துக்கொண்டிருந்தோம். அதற்குப் பின்னர், மத்திய அரசு அந்தத் திட்டத்தை நிறுத்திய காரணத்தினால் இன்றைக்கு அதனை நாமே செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு நிதிநிலைமைதான் முக்கியக் காரணம். இருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடந்த ஐந்தாண்டு காலத்தில் நகராட்சி நிருவாகத்தின்மூலம் 327 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கக் குடிநீர்த் தொட்டிகள்; சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின்மூலம் 53, பேரூராட்சிகளின்மூலம் 674, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக 26,284 தொட்டிகள், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாக 11,007 என 38,345 குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்போல, கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் ரூ.2,974.17 கோடி மதிப்பீட்டில் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவர் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார். இது ஒரு நல்ல கேள்வி. கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பழுதடைந்த தொட்டிகளைக் கண்டறிந்து அங்குள்ள நிதிநிலைக்கு ஏற்பவோ அல்லது மீண்டும் கூடுதலாக வாரியத்திற்கு நிதியை ஒதுக்கியோ, சூழ்நிலைக்கேற்ப புதிய குடிநீர்த் தொட்டிகள் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 6 ஆண்டுகள் ஆகியும், அந்தப் பணிகள் முடிவடையாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட சாலைகள் அனைத்தும் பொது மக்கள் நடந்து செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தினரிடம் சென்று "இந்தப் பணிகள் மந்தமாக நடைபெறுகின்றன, வேகப்படுத்துங்கள், 6 ஆண்டு காலம் ஆகிறது" என்று சொன்னால், அரசின் சார்பாக ஒதுக்கப்பட்ட நிதி விடுவிக்கப்படாத காரணத்தினால், அந்தப் பணிகள் மந்தமாக நடைபெறுகின்றன என்று அதிகாரிகள் சொல்கின்றனர். எனவே, இந்த அரசாங்கம் உடனடியாக நிதியினை விடுவித்து, அந்தப் பணிகளை வேகமாக நிறைவேற்றித்தர முன் வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பைப் லைன் பதிக்கும்போது சாலைகள் பழுதடைகின்றன; அந்தச் சாலைகளெல்லாம் போட வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கை மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இதுவரை எங்கேயும் அதுபோன்ற நிலை இல்லை. ஒரு குடிநீர்த் திட்டம் வருகிறது என்றால், பைப் லைன் பதித்து இணைப்பு கொடுக்கிறோம். பாதாள சாக்கடைத் திட்டமாக இருந்தாலும், நாம் வீட்டு இணைப்பைக் கொடுக்கிறோம். சாலை போட்டு முடிந்தபிறகு, new connection எடுக்கும்போது, அப்போதைக்கப்போது, சாலையை cut செய்து கொண்டிருப்பார்கள். ஆனால், இப்போது பைப் லைன் பதிக்கும்போதே, எல்லா இணைப்புகளையும் உடனடியாக நாம் செய்து கொடுத்துவிடுகிறோம். அந்தத் திட்டத்தை தற்போது கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே, இதனை இத்துறை

2018 ஜூன் 7]

சார்ந்த Demand-*ல் நாங்கள் அறிவிப்பாக வெளியிட்டிருக்கிறோம். ஆகவே, இனிமேல் இடையில்* road cutting *எல்லாம் வராது. ஆகவே, இதற்கு முன்பு பார்த்தோம் என்றால், குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் சரி, அதைப்போல பாதாள சாக்கடைத் திட்டமாக இருந்தாலும் சரி, பைப் லைன் போடும் போது, எவ்வளவு* cut *செய்து எடுக்கின்றோமோ, அந்த அளவுக்குத்தான் போடுவோம். மூன்று அடிக்கு நாம்* cut *செய்து எடுக்கிறோமென்றால், 3 அடிக்கு மட்டும்தான் சாலையைப் போடுவோம். இப்போது அதனை மாற்றி, முழுமையாகப் போட்டால்தான் சாலை சரியாக இருக்கும் என்கின்ற காரணத்தினால், இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலைப் பணியினை கண்டிப்பாக எடுத்துக்கொண்டு விரைவில் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

ஐஸ்கட்டி தொழிற்சாலை

***12688—திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழவேற்காட்டில் ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பழவேற்காட்டில் ஐஸ்கட்டி நிலையம் அமைப்பது தொடர்பான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.